**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No. 113/2011** **Date:03 /09/2024**

**PW 4 சௌகத் அலி**

**4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.1 என்னுடைய தாய்மாமன் என்றால் சரிதான் . எனது மாமா டிராக்டர் வாங்குவதற்காக லப்பைகுடிகாடு கனரா வங்கியில் பட்டா சிட்டா அடங்கலை வைத்து 2004ல் லோன் பெற்றார் என்றால் சரிதான். அ.சா.1 எந்த தேதியில் லோன் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. பட்டா சிட்டா அடங்கல் ஆவணங்களில் 2004ல் துணை வட்டாட்சியராக வேப்பந்தட்டையில் பணியாற்றியவர் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான். 2004ல் பட்டா சிட்டா ஆகியவற்றில் நான்காவது எதிரி கையெழுத்து போட்டுள்ளார் என்ற விவரம் தெரியாது. வாலிகண்டாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எந்த தேதியில் சென்று வில்லங்க சான்று பார்த்தோம் என்றால் ஞாபகமில்லை. அ.சா.1கு சொந்தமான சொத்தை 1 முதல் 3 எதிரிகள் பெயரில் யார் பட்டா மாற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் 4வது எதிரி முத்தையா மாற்றினார். 4வது எதிரிக்கு பட்டாவை மாற்றுவதற்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. 2004ல் லோன் பெறுவதற்கான கணினி பட்டாவிலும் 2010ல் மாற்றம் செய்யபட்ட கணினி பட்டாவிலும் 4வது எதிரி கையெழுத்து போட்டார் என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. அப்படி சொல்லியிருந்தால் அது தவறு. 4வது எதிரி கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டாவில் தான் கையெழுத்து போட்டுக் கொடுத்தார் என்றாலும் அவர் பட்டாவை மாற்றவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை அழைப்பாணை கொடுத்தபோது விசாரித்தார்கள். அதற்கு முன்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

CJM PBR

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

sd/-

Judicial Magistrate No.I,

Perambalur.

JM-I, PBLR